1995 மார்ச் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 148, திரு தி. சாத்தையா, மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

148—

இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் சாலையை அகலப்படுத்துதல்

**34272—திரு. தி. சாத்தையா :*

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராஜபாளையம் ஊராட்சி ஒன்றியம், அயன்கொல்லன் கொண்டானில் இருந்து நக்கனேரி செல்லும் சாலை மிகவும் குறுகலாக இருப்பதால், அந்தச் சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் தொகுதியில் நக்கனேரி, மற்றும் அயன்கொல்லன் கொண்டான் ஆகிய இந்த இரண்டு கிராமங்களுமே கிட்டத்தட்ட 3 கிலோ மீட்டர் இடைவெளியில் இருக்கின்றன. அதிகமான ஜனத்தொகை கொண்ட கிராமங்களாகும். அதற்கு இடையில் உள்ள சாலை மிகவும் குறுகிய சாலையாகவும், சாலைக்கு அருகாமையிலுள்ள வயல்கள் மிகவும் பள்ளமாக இருப்பதாலும், கிட்டத்தட்ட 8 தடவை அங்கே பேருந்துகள் சென்று வருவதாலும், ஒதுங்குவதற்குக்கூட இடம் இல்லாமல் பள்ளமாக இருப்பதாலும் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருந்து 2, 3, விபத்துக்கள்கூட ஏற்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு கிராமங்களுமே அதிகமாக ஆதிதிராவிடர் ஜனத்தொகையைக் கொண்ட ஊர்களாகும். ஆகையினால், இதற்கு முன்னுரிமை அளித்து, இந்தச் சாலையை அகலப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[*1995 மார்ச் 29*

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒருவழிச் சாலையாக இருக்கின்ற சாலைகளை இருவழித்தடச் சாலைகளாக மாற்றுகின்றபோது, அதிலே இருக்கின்ற 'Passenger car units" என்று சொல்லப்படுகின்ற பி.சி.யு-ஸ் இவைகளைக் கணக்கிலே வைத்துதான் நாம் அந்தச் சாலைகளை அகலப்படுத்துகிறோம். போக்குவரத்துச் செறிவு நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 2500 பி.சி.யு.-ஸ் மற்றும் அதற்கு மேலே உள்ள சாலைகளைத்தான் இருவழிச் சாலைகளாக மாற்ற முடியும். ஒருவழிச் சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்றுகின்றபோது, வாகனப் போக்குவரத்து அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கவேண்டும். அதற்காக இலக்கை நிர்ணயித்து, அந்த இலக்குப்படிதான் நாம் சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையிலே பார்க்கின்றபோது, அந்தச் சாலையில் ஏறத்தாழ 630 பி.சி.யு-ஸ் ஆகத்தான் இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை இருவழிச் சாலையாக மாற்றுவதற்கானச் சாத்தியக்கூறுகள் இல்லை. அதிலே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இல்லாத காரணத்தாலே, அரசு நிதி ஆதாரத்தைச் செலவழித்துச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, இருவழிப் பாதை அல்ல. பாதை குறுகலாக இருக்கிறது. அதைச் சிறிது அகலப்படுத்தவேண்டும் என்றுதான் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அதற்கான ஆணையைப் பிறப்பித்தால், அகலப்படுத்துவதற்குத் தேவையான அந்த ஏரியாவை பெற வயல் சொந்தக்காரர்களிடம் தொகுதி எம்.எல்.ஏ. என்ற முறையில் பேசி, அவர்களை என்னால் கன்வின்ஸ் செய்ய முடியும். மக்கள் எல்லாம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிறைய முன்னேற்றத் திட்டங்களை, பணிகளைச் செய்ததினால், எனது தொகுதி நன்றாக இருக்கிறது என்று. புரட்சித் தலைவி அவர்களை வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்த நிலையில். குறுகலாக உள்ள அந்தப் பாதையை அகலப்படுத்த மீண்டும் பரிசீலனை செய்து, ஆணையைப் பிறப்பிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன். இருவழிப் பாதையை நான் கேட்கவில்லை. அகலப்படுத்தத்தான் நான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சாலை ஏற்கெனவே ஒருவழிப் பாதையாக,

1995 மார்ச் 29]

தார்ச்சாலையாக இருக்கிறது. அதை அகலப்படுத்துவது என்றால், இருவழிச் சாலையாகத்தான் மாற்றவேண்டும். அந்தச் சாலை ஒருவழிப்பாதை கொண்ட தார்ச்சாலை என்று தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அந்தச் சாலையை இனிமேல் அகலப்படுத்தவேண்டும் என்றால், எப்படி அகலப்படுத்தவேண்டும். என்று நம்முடைய உறுப்பினர் நினைக்கிறார் என்று தெரியவில்லை. ஒருவழிப்பாதையை அகலப்படுத்த வேண்டும் என்றால், இருவழிப்பாதையாகத்தான் மாற்ற வேண்டும். ஆகவே, குறுகலான சாலை என்ற பேச்சுக்கே இடம் இல்லை. ஏற்கெனவே ஒருவழிப்பாதை கொண்ட தார்ச்சாலையாக இருக்கிறது. ஆகவே இதை மாற்றுவது என்றால், இருவழிச் சாலையாக மாற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. அதற்கு அந்தச் சாலையிலே வாகனப் போக்குவரத்தினுடைய செறிவு இல்லை என்று நான் தெரிவித்தேன். ஆகவே செய்ய இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 149, திரு. கே. பி. ராஜு, இருக்கையில் இல்லை. திரு. சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

149—

கோயம்புத்தூரில் வர்த்தகப் பொருட்காட்சி அமைத்தல்

14881*—திரு. கே.பி. ராஜு :**

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், விமான நிலையம் அருகில் வர்த்தகப் பொருட்காட்சி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.